# அனுராதபுரம் ஆஸ்பத்திரி செல்லுமாறு கர்ப்பிணிகளுக்கு இராணுவத்தால் நிர்ப்பந்தம்

நயினாதீவிலிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவதற்கென அனுப்பப்பட்ட கர்ப்பிணிகள் இருவரை பலாலி இராணுவத்தினர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குச் செல்லுமாறு நிர்ப்பந்தித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. யாழ் ஆஸ்பத்திரிக்கு இவர்களை அனுப்ப விரைவான ஒழுங்குகள் செய்யாமல் இரு நாள்கள் பலாலி முகாமிலேயே இக் கர்ப்பிணிகள் வைக்கப்பட்டிருந்தனர். எந்நேரமும் அங்கு ஒரே வெடிச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்ததாகவும், யாழ் ஆஸ்பத்திரியில் தங்குவசதிகள் இல்லை யென்று கூறி இராணுவத்தினர் தம்மைத் தாமதப்படுத்தியதாகவும் தெரிவித்தனர். தாம் பலத்த மறுப்புத் தெரிவித்ததனையடுத்து நேற்று இங்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் இக் கர்ப்பிணிகள் மேலும் கூறினர். திருமதி இராசலஷ்மிசுந்தரலிங்கம் (37 வயது) 5 ம் வட்டாரம் நயினாதீவு, திருமதி மஞ்சுளா செல்வநாதன் (30 வயது) 6 ஆம் வட்டாரம் நயினாதீவு ஆகியோரே பிரதாபக்கர்ப்பிணிகளாவர்.


பக்கங்கள் நான்கு                    விலை ரூபா 5 . 00

# முரசொலி

முரசு 06 ஒலி 08 பிரசோற்பதி கார்த்திகை 19 ( 05 - 12 - 1991 ) வியாழன்


## கொடுவாமடுவில்
## மேலும் ஆயுதங்கள் மீட்பு

கடந்த 29 ஆம் திகதி மட்டக்களப்பு கொடுவாமடுப் பகுதியில் மோதல் நடைபெற்ற இடத்திலிருந்து மேலும் சில இராணுவ ஆயுதங்களும் சிப்பாய்களின் சடலங்களும் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன.

தாக்குதல் நடைபெற்ற இடத்திற்கு நேற்றுமுன்தினம் மீண்டும் விடுதலைப்புலிகள் சென்று தேடுதல் நடாத்திய போது இராணுவத்தினரின்

* ரி-56-1 ரவைக்கூடுகள் 6
* 7.62 ஐ.எம் ரவைகள் 228
* ரி. என். ரி. கைக்குண்டுகள் 2 என்பன மீட்கப்பட்டன.

முன்னதாக கொடுவாமடுவில் நடைபெற்ற மோதலில் 12 படையினர் பலியானதும் ஆயுதங்கள் மீட்கப்பட்டதும் தெரிந்ததே.

## அபாயப்படி

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சகல பணியாளர்களுக்கும் ஆறு மாத அபாயப்படி விரைவில் வழங்கப்படவுள்ளது.

இதற்கான அங்கீகாரம் யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது. 13

## தபால் பார்சலில் தங்கக்கட்டி

சிங்கப்பூரிலிருந்து தபால் பார்சல் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்ட ஒரு வரது பார்சலில் 92 லட்சம் பெறுமதியான தங்கப்பாளங்களும் கைக்கடிகாரங்களும் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

—04 ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் ஊரடங்கு

மன்னார் தீவு தவிர்ந்த மன்னார் மாவட்டத்தில் உடனடியாக ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.

# நயினாதீவில் 1500க்கு மேற்பட்ட குடும்பங்கள் அவல நிலையில்

## உணவு, மருந்து, தொழில் எதுவுமே இல்லை

ஸ்ரீலங்கா அரசு, இராணுவம் நிலைகொண்டுள்ள தீவகப்பகுதிகளில் சமூக நிலைமையைத் தோற்றுவிக்க முயற்சி மேற்கொள்ளப்படுவதாக அறிவித்துவருகின்றபோதிலும் அங்குநிலைமை மிக மோசமாக இருப்பதாகவும் இராணுவம் நுழைந்த நாளிலிருந்து அங்கு வாழும் மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இன்றி, உரிய மருந்து வகைகளின்றி, தொடர்ந்தும் தொழில் வாய்ப்பின்றி அவலப்படுகிறார்கள்.

நயினாதீவில் அக்டோபர் மாதம் பத்தாம் திகதி இராணுவம் ஊடுருவியதையடுத்து இன்று வரை அங்கு வாழும் 1500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பட்டினியால் வாடுவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

ஒரு வாரத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களே இராணுவம் புகுந்த வேளை அங்கு கையிருப்பில் இருந்ததாகவும், புங்குடுதீவு பலநோ.கூ. சங்க மூலமே பொருள்கள் எடுத்துவர வேண்டிய நிலை இருந்ததாகவும் ஆனால் அது சாத்தியப்படாததால் பட்டினி நிலை உருவானதாகவும்

—04 ஆம் பக்கம் பார்க்க

### காமினி திஸநாயக்கா சொல்கிறார்

## தீர்ப்பு ஆச்சரியம் தருகிறது எனினும் ஏற்றுக்கொள்கிறோம்

''உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆச்சரியம் அளிக்கிறது எனினும் தீர்ப்பை ஏற்கிறோம்'' என்றார் எம். பி. பதவியை இழந்த அதிருப்திக் குழுவைச் சேர்ந்த காமினி திஸநாயக்கா.

''மீண்டும் ஜனநாயகம் தோன்றும் வரை எமது போராட்டம் தொடரும் நாம் புதிதாக அமைத்துள்ள ஐ.தே.ஜ.மு. கட்சியின் பதவி இழந்த எட்டுப்பேரும் இணைந்துள்ளோம்'' என காமினி நேற்று செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்.

### ● விமானக்குண்டு வீச்சின் மத்தியிலும் 6மணிநேரம் புலிகள் மோதல்

# மன்னார் - அகத்திமுறிப்பில் படையினரின்

## பாகிஸ்தான் அம்புலன்ஸ் உதவி

# மன்னார் - அகத்திமுறிப்பில் படையினரின் முன்னேறல் முயற்சி முறியடிப்பு!

மன்னார் - சிலாவத்துறையிலிருந்து வெளியேறிய படையினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் தொடர்ந்து ஆறு மணித்தியாலங்கள் கடும் தாக்குதலை மேற்கொண்டதாக அறிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் காலை 8, 30 மணியளவில் சிலாவத்துறை முகாமிலிருந்து வெளியேறிவந்த படையினரை அகத்திமுறிப்புப்பகுதியில் வைத்துப் புலிகள் மடக்கினர்.

படையினருக்கு உதவியாக இரு வை - 8 விமானங்களும், இரு ஹெலிகொப்டர்களும் தாக்குதல்களை மேற்கொண்டன.

**வீரமரணம்**

இம் மோதலின் போது படையினருக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது. புலிகள் தரப்பில் ஜெம், மங்களன் (சி திமலே

—04 ஆம் பக்கம் பார்க்க

## பாகிஸ்தான் அம்புலன்ஸ் உதவி

வடக்குக் கிழக்கு அகதிகளுக்கு இரண்டு அம்புலன்ஸ் வண்டிகளைப் பாகிஸ்தான் அரசு வழங்கியுள்ளது.

இவை அண்மையில் கப்பல் மூலம் கொழும்பு வந்து சேர்ந்துள்ளன. (06)

## 21 இல் சார்க் மாநாடு; மாலைதீவு அறிவிப்பு

எதிர்வரும் 21 ஆம் திகதி கொழும்பில் சார்க் மாநாடு நடாத்தப்படும் என மாலைதீவு ஜனாதிபதி கயூம் நேற்று மாலை ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு அறிவித்துள்ளார்.

ஒரு நாள் மாநாடாக நடாத்த உறுப்பு நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும், மாலைதீவு வெளியுறவு அமைச்சரின் விஜயத்தின்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் நடைபெறும் சாத்தியம் இப்போதில்லை

தெற்கில் இப்போது பொதுத் தேர்தல் நடாத்தக் கூடிய சாத்தியங்கள் குறைவாகவே இருப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியற் பிரேரணையில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மக்கள் மனங்களில் இருந்து மறையும் வரை தேர்தல் நடைபெறுவதை ஜனாதிபதி பிரேமதாஸ ஒத்திவைக்கவே முயல்வார் எனச்சுட்டிக் காட்டப்படுகிறது.

### சுய தொழில் முயற்சியில் ஈடுபட

## விதவைகளுக்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும்

அண்மைக்கால சம்பவங்களினால் கணவனை இழந்த விதவைகளாயுள்ளவர்கள் அவரவர்களுக்குப் பொருத்தமான சுயதொழிலை மேற்கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்க நிபுணத்துவ சேவையாளர்கள் முன் வருதல் வேண்டும்.

இவ்வாறு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (T. R R. O) தமது அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

யாழ்ப்பாணமாவட்டத்தில்

—04 ஆம் பக்கம் பார்க்க

## 6000 ஜே. வி. பி. நபர்கள் தடுப்புக்காவலில் உள்ளனர்

கடும் போக்குடைய ஆறாயிரம் ஜே. வி. பி யினர் தடுப்புக்காவலில் உள்ளனர் என பாராளுமன்றத்தில் அமைச்சர் வின்சன்ட் பெரேரா கூறினார்,

எதிர்க்கட்சி எம் பி ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறினார்,

ஜே. வி, பி இயக்கத்தைச் சேர்ந்த 6720 பேர் புனர்வாழ்வுக்குப் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்,

நாட்டில் உள்ள புனர்வாழ்வு நிலையங்களில் இன்னமும் 1565 பேர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்றும் அவர் சொன்னார், 06

## யாழ் செயலக பிரதி ஆணையாளர்

யாழ் செயலகத்தின் பிரதி ஆணையாளராக சங்கானை உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய து. வைத்திலிங்கம் மகாண அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இப்பதவியுடன் யாழ் செயலக பொது ஜனத் தொடர்பு அதிகாரியாகவும் தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபராகவும் கடமையாற்றி வருவார்.

(06)

## கடிதத் தொடர்புக்குத் தடை

உறவினர்களுடன் கடிதத் தொடர்பு வைக்கக் கூடாதென நயினாதீவு மக்களைக் கடற்படையினர் மிரட்டியுள்ளதாகத் தெரியவருகிறது.

தீவுப்பகுதிக்கப்பால் வாழும் தம் உறவினர்களுக்கு கடிதம் எழுதுவதற்கு அனுமதிகேட்டபோது மறுத்த கடற்படையினர் கடிதங்கள் அனுப்ப வேண்டிய அவசியமொன்றும் இல்லை எனக் கூறினராம்!

# அரசுக்கு எதிராக தீவிர நடவடிக்கை எடுக்கப் போவதாக

# லலித் நேற்று அறிவிப்பு!

## திடீர் பொதுத் தேர்தலும் வரலாம் என்கிறார் அவர்

எட்டு அதிருப்தியாளர்களும் ஐ. தே. க. விலிருந்து நீக்கப்பட்டதையடுத்து வரைவில் அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி பிரேமதாச தனக்கு மிகவும் விசுவாசமான உறுப்பினர்களை அமைச்சரவையில் இணைத்து கட்சிக்குள் தனது செல்வாக்கை உறுதி செய்ய முயலக் கூடுமென ஏஜென்சிச் செய்தி நிறுவன விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஜனநாயகம் கோரியும், அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரக் கூறியும் கிராமம் கிராமமாகப் பிரசாரக் கூட்டங்களைத் தாம் தீவிரமாக நடாத்தப் போவதாக அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த லலித் அத்துலத் முதலி அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களைத் தம்முடன் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ள அவர் பாராளுமன்றம் திடீரெனக் கலைக்கப்பட்டு புதிய தேர்தல் நடாத்தப்படலாமெனவும் ஊகம் தெரிவித்துள்ளார்.

10 மாதத்தில் மட்டும்

# 30 கோடி 31 லட்சம் ரூபா

# கடவுச்சீட்டு வழங்கலால் வருமானம்!

கடந்த ஜனவரி முதல் அக்டோபர் வரையிலான 10 மாத காலப்பகுதியில் கடவுச்சீட்டுக்களை விநியோகித்ததன் மூலம் குடிவரவு, குடியகல்வுத்திணைக்களம் 30 கோடியே 31 இலட்சம் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளன.

இக் காலப் பகுதியில் இரண்டு லட்சத்து 71 ஆயிரம் கடவுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளது.

இவற்றில் 86, 787 கடவுச்சீட்டுகள் உடன் வழங்கு முறையில் கொடுக்கப்பட்டவையாகும். அவற்றின் மூலம் 15 கோடி, 95 லட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளது.

## சாரணர் பயிற்சி வகுப்பு

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கம் நடாத்தும் சாரணத் தலைவர்களுக்கான பாசறைத் திறன், வனைத்திறன் பயிற்சி வகுப்புக்கள் இம்மாதம் 10 ஆம், 11ஆம் திகதிகளில் சுன்னாகம் சுந்தரோடை தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன (18)

## புதிய அதிபராக சுகந்தன்

யாழ் சித்த ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியின் அதிபராக வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி வட இலங்கை சுதேச வைத்திய சபையினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

12 வருடங்களாக இக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், 4 வருடங்களாக உப அதிபராகவும் இவர் கடமையாற்றியுள்ளார். (13)

# சிறிய செய்திகள்

## உக்ரேனும் பிரிந்தது

சோவியத் குடியரசுகளில் ஒன்றான உக்ரேன் பிரிந்து செல்வதை சோவியத் அரசு ஏற்றுக்கொண்டது. உக்ரேன் பிரிந்து செல்வதற்கான உரிமையை அக்குடியரசில் நடந்த கருத்து வாக்களிப்பு முடிவுகள் எடுத்துக் காட்டியமை குறிப்பிடத்தக்கது.

## மருதங் கன்று இலவசம்

மருத மரக்கன்று வளர்க்க விரும்புவோர் நேரில் வந்து இலவசமாக அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என மில்க்வைற் நிறுவனம் அறிவித்துள்ளது.

## வைபவம்

வடமராட்சிக் கல்விக் கோட்ட பகுதிக்கான ஆங்கில தின போட்டி சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரியில் ஆங்கில வெளிக்கள உதவி ஆலோசகர் திருமதி ஜெயபூபதி குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது (11)

## கருத்தரங்கு!

ஆசிரியர்களுக்கு எயிட்ஸ் வியாதி சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று யாழ் மத்திய கல்லூரியில் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8! 30 மணிக்கு வேலணைக் கோட்டக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி புலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளதாக யாழ் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கில் இந்நோயின் தாக்கம், நோய்க்கான காரணியும், நோய் அறிகுறிகள், சிக்கல்கள், நோய்த் தடை, சுகாதாரக் கல்வியும் எயிட்ஸ் வியாதியும், எயிட்ஸ் வியாதியில் ஆசிரியரின் பங்கு என்ற தலைப்பில் கருத்துக்கள் வழங்கப்பட உள்ளது. 15

## மாவட்டரீதியில் பேச்சுப்போட்டி

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் போருட் நிறுவனத்தின் அனுசரணையுடன் மாவட்ட ரீதியில் நிலையங்களுக்கிடையே பேச்சுப்போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

20ஆம் திகதி காலை வேம்படி மகளிர் கல்லூரியில் நடாத்தப்படவுள்ள இப்போட்டி நான்கு பிரிவுகளாக நடாத்தப்படும்.

போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 14 ஆம் திகதியெனவும், விவரங்களை 33, பருத்தித்துறை வீதியிலுள்ள அலுவலகத்தில் பெறலாமெனவும். சம்மேளனத் தலைவர் இ. தவகோபால் அறிவித்துள்ளார்.

## சங்கம் அன்பளிப்பு

வலிமேற்கு சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தினர் மாவீரர் நாளை முன்னிட்டு, மானிப்பாய் உடுவில் றோட்டில் உள்ள பெற்றோரை இழந்த பிள்ளைகள் பராமரிப்பு நிலையத்திற்கு 150 பணிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (18)

## பரீட்சை அலுவலர் கூட்டம்

1990, 1991ஆம் ஆண்டுகளுக்கான க. பொ. த. சாதாரணதரப் பரீட்சைப் பணிகளில் ஈடுபடவுள்ள உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தற் கூட்டம் ஒன்று யாழ்


## அறிவித்தல்

### வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாஜம்

சகல சிகையலங்கரிப்பு நிலையங்களையும் மீண்டும் வழமையான புதன், ஞாயிறு லீவு நாட்களில் பூட்டுமாறு வேண்டுகின்றோம்.

12020 தலைவர்


இப்போது

# சிறுமுதல் கொண்டு செல்வம் பெற கோழிவளர்ப்பு உதவியாகும்

மனிதனின் உடல் வளர்ச்சிக்கும், உள வளர்ச்சிக்கும் இன்றியமையாததாகக் கருதப்படும் புரத உணவினைக் கூட்டிக் கொள்வதற்குக் கோழிவளர்ப்பினையும் மேற் கொள்ளலாம், கோழியிலிருந்து பெறப்படும் முட்டையில் புரதம் மட்டுமன்றி, இரும்பு, பொஸ்பரசு போன்ற கனிப் பொருட்களும் உயிர்ச்சத்து A.B என்பனவும், கொழுப்பும் அடங்கியுள்ளன. உயர்போசணைப் பெறுமானம் மிக்க முட்டை, இறைச்சி என்பனவற்றைப் பெறக்கூடிய கோழி வளர்ப்பினை இரு வகையாகப் பிரிக்கலாம் அவையாவன:-

(1). சுயதேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒவ்வொருவரும் ஒருசில கோழிகளை வளர்த்தல்.

(2). வர்த்தக நோக்கில் பெருந்தொகையான கோழிகளை வளர்க்கக் கூடிய வகையில் பாரிய பண்ணைகளை உருவாக்குதல்.

சுயதேவை அடிப்படையிலோ வர்த்தக நோக்கிலோ கோழி வளர்ப்பினை மேற்கொள்வோர், அம் முயற்சியில் கையாளக் கூடிய தொழில் நுட்பங்களை, வளர்க்கக் கூடிய முறைகளை அறிந்திருக்க வேண்டும். போதிய அறிவும் அனுபவமும் உடையவர்களே கோழி வளர்ப்பில் இலாபத்தை அடைய முடியும்

கோழி வளர்ப்பு முறைகளை முதலில் இருவகையாகப் பிரிக்கலாம். அவையாவன:-

(1). திறந்த வெளியில் வளர்த்தல்

(2). அடைப்புக்குள் வளர்த்தல்

இம்முறை பொதுவாகச் சிறந்த முறையல்ல, ஏனெனில் கூடிய நிலப்பரப்பில் குறைந்தளவு கோழிகளையே வளர்க்கலாம். எனவே, கூடிய நிலப்பரப்பும் அதிக தொழிலாளர்களும் தேவைப்படும், இம்முறையில் சில குறிப்பிட்ட வர்க்க கோழிகளையே வளர்க்க முடியும். அத்துடன் உண்ணும் உணவில் பெரும் பகுதி அனுசேபத்திற்குச் செல்கின்றது. அதிக பரப்பில் உலாவித் திரிவதனால் கூடிய உடலுழைப்பு ஏற்படுகிறது. இம்முறையில் சில நன்மைகளும் உள. குறைந்த முதலுடன் இம் முயற்சியினை ஆரம்பிக்கலாம். கோழிகள் நோய் பீடைகளினால் அதிகளவு பாதிக்கப்படுவதில்லை.

### அடைப்புக்களில் வளர்த்தல்:

இது இருவகைப்படும் அதாவது முழு நேரமும் அடைப்புக்குள் வளர்க்கும் முறை (Intensive System) ஒன்று. மற்றையது குறிப்பிட்ட நேரத்திற்கு கோழிகளை வெளியில் விட்டு பின்பு

## திருமதி க.மகேந்திரன் விரிவுரையாளர்

அடைப்புக்குள் விடுதல் (Semiintensive System) முழுநேரமும் வளர்க்கும் முறையிலேயே பெரும் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன.

### கனகூளமுறையில் வளர்த்தல்: (Deep Litter System)

முழுநேரமும் அடைப்புக்குள் வளர்க்கும் முறைகளுள் ஒன்றான இம்முறை இலாபகரமானது இதனை கூளப்படையக்கு முறை எனவும் அழைக்கப்படும். இம்முறையில் வளர்க்கப்படும் கோழிகளின் உடலுழைப்புக் குறைவாகும். வருடம் ஒருமுறை கூளத்தை மாற்றவேண்டும். கோழி எச்சமானது கூளத்தினால் உறிஞ்சப்பட்டு அழியவும் மற்றும் அனுகூலமாக்கும் பக்றீரியாத் தாக்கத்தினால் உக்கிய பொருளாக கூளம் மாற்றமடையவும் முடிகிறது. இவ்வாறு உண்டாகும் மக்கும் பொருளில் இறிபோயிளேவின் (B12) உண்டாவதுடன் இத்தாக்கத்தினால் உண்டாகும் அமோனியா கொக்சிடியோ

## இப்போது யாழ்நகரில் முரசொலி விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன!

484/1 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்றெட் கட்டிடத்தின்

(இலங்கை வர்த்தக வங்கி யாழ் கிளைக்கு அருகிலும்
யாழ் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு முன்பாகவும்)

முதலாம் மாடியில்

# முரசொலி விளம்பர கருமபீடம்

காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை
(சனி, ஞாயிறு தவிர்ந்த நாட்களில்)

இயங்கி வருகின்றது.

பொது முகாமையாளர்
முரசொலி

A12021


...ளில் ஈடுபடவுள்ள உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தற் கூட்டம் ஒன்று யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இம்மாதம் 9ஆம் திகதி சனிக்கிழமைநடைபெறவுள்ளது 18

## இலவச வகுப்புக்கள்

நல்லூர் வடக்கு தமிழ்த்தாய் கல்வி நிறுவனம் புதிய கல்வி ஆண்டு 92 இலவச வகுப்புக்களை எதிர்வரும் 9ஆம் திகதியில் ஆரம்பிக்கவுள்ளது

இவ் இலவச கல்விச் சேவையில் கல்வி பயில விரும்பும் ஆண்டு 7, 8, 9, 10, 11 மாணவர்கள் நல்லூர் வடக்கில் அமைந்துள்ள தமிழ்த்தாய் மன்ற தலைமை அலுவலகத்தில் விவரம் அறியலாமென அறிவிக்கப்படுகிறது.


### சிறு விளம்பரம்

**சோதிடம்**

எமது ஸ்தாபனம் டிசம்பர் 24ஆம் திகதி வரை மூடியிருக்கும். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம் 146, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

12015


கூளம் மாற்றமடையவும் முடிகிறது. இவ்வாறு உண்டாகும் மக்கும் பொருளில் றிபோபிளேவின் (B12) உண்டாவதுடன் இத்தாக்கத்தினால் உண்டாகும் அமோனியா கொக்சிடியோசிஸ் நோயிலிருந்து கோழிகளைப் பாதுகாக்கவும் உதவுகின்றது.

கூளமாக நெல்லுமி, மரமரத்தூள், மரச் சீவல், வைக்கோல் என்பனவற்றில் ஒன்றை அல்லது சிலவற்றைக் கலந்து உபயோகிக்கலாம். கூளத்தினை உலர்ந்த நிலையில் வைத்திருத்தலிலேயே இவ்வளர்ப்பு முறையின் வெற்றி தங்கியுள்ளது. கூளத்துக்கு திருப்திகரமான காற்றோட்டம் அவசியம். இதற்காகவே சுவர்கள் நிலத்திலிருந்து 75 cm உயரத்தில் அமைக்கப்பட வேண்டும் குஞ்சுகளாயின் 100 cm உயரமான சுவர்களை அமைக்கலாம் சுவர்களுக்கு மேல் 1 cm விட்டமான கம்பிவலை அடிக்கப்பட வேண்டும் விட்டம் கூடிய கம்பிவலையாயின் எலி, பாம்பு போன்றவற்றால் கோழிகளுக்கு அபாயம் ஏற்படலாம்.

கோழிகள் முட்டையிடுமளவு ஒளியிலும் தங்கியுள்ளதால் கோழிக்கூட மரங்கள் குறைவான இடத்திலும் அதிக நேரம்கூடிய சூரிய ஒளிபடத்தக்கதான திசையிலும் அமைதல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு கோழிகளுக்கும் ஏற்ற அளவு தரைப்பரப்பு (பாரமற்ற கோழிவர்க்கங்களுக்கு 1 சதுர மீற்றர்/ 1 கோழி, பாரமான கோழிவர்க்கங்களிற்கு $1\frac{1}{4}$ சதுர மீற்றர் 1 கோழி) இருத்தல் அவசியமாகும் நிலம் அமைக்கப்படும் போது அத்திவாரக் கொங்கிறீற்றுக்களுக்கிடையில் தார் இடுதல் மூலம் கசிதலைத் தடுக்கலாம் அத்துடன் கோழிக் கூட்டைச் சுற்றி நீர்தேங்கி நிற்காதவாறு அமைத்தல் வேண்டும். உட்சுவர்கள் அழுத்தமாகச் சிமெந்தினால் பூசப்படுதல் வேண்டும். அவ்வாறு இல்லையேல் எறும்பு, பல்லி, கிருமிகள் என்பன சுவரொதுக்குகளில் இருக்க நேரிடும். அதுமட்டுமல்லாமல் கிருமிநாசினி பயன்படுத்தல் சிரமம்.

(தொடரும்)

★ விரைவில் 8 புதிய பாராளுமன்ற உறுப்பினர் நியமனம்

# பதவியிழந்த அதிருப்தியாளர்களின் இடங்களில் இரண்டு இ. தொ. காவுக்கு கிடைக்கும்!

## லலித்தின் இடத்திற்கு ஹட்சன் சமரசிங்க

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து எட்டு அதிருப்தியாளர்களும் நீக்கப்பட்டமையை உயர் நீதிமன்றம் அங்கீகரித்தைத் தொடர்ந்து அவர்களின் பாராளுமன்ற இடங்களுக்கு புதிய உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினால் நியமிக்கப்படவுள்ளனர்.

கடந்த பொதுத்தேர்தலில் குறித்த மாவட்டங்களில் போட்டியிட்டு, ஐ. தே. க. வேட்பாளர்கள் பட்டியலில் அடுத்த ஸ்தானத்திலிருப்பவர்களே இப்பகுதிகளுக்கு புதிய உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அடிப்படையில் நுவரேலிய மாவட்டத்தில் காமினி திசநாயக்காவின் இடத்திற்கு இ தொ கா. வைச்சேர்ந்த எம் சிவலிங்கமும், பதுளை மாவட்டத்தில் சமரவீரவீர வன்னியின் இடத்திற்கு டி. பி. சென்னனும் நியமிக்கப்படுவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த தேர்தலில் மலையகப்பகுதியில் இ. தொ. காவுடன் ஐ தே. க கூட்டாகப் போட்டியிட்டது தெரிந்ததே

கொழும்பு மாவட்டத்தில் லலித் அத்துலத்முதலியின் இடத்திற்கு இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தலைவர் ஹட்சன் சமரசிங்க தெரிவாவார்.

★ ★

## தோட்டத் தொழிலாளர்களுக்கு கட்டாய ஆயுள் காப்புறுதி

பெருந்தோட்டத்துறை ஊழியர்களும் கட்டாய ஆயுள் காப்புறுதித்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படவுள்ளனர்.

மாதாந்தம் 10 ரூபா தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து காப்புறுதி கட்டுப்பணமாக அறவிடப்படும்.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதனால் பதினையாயிரம் ரூபா வரையிலான நன்மை தொழிலாளர்களுக்கு கிடைக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## 34 புதிய பாடத்திட்ட பரீட்சை மண்டபங்களில் மாற்றம்

யாழ் மாவட்டத்தில் க. பொ த சாதாரண தரப் பரீட்சைக்கு (புதிய பாடத்திட்டம்) நடைபெறவிருந்த 34 பரீட்சை மண்டபங்கள் மாற்றப்பட்டுள்ளன.

இவற்றில் 6 மண்டபங்கள் பண்டத்தரிப்புக் கோட்டத்திலும், எட்டு மருதனாமடம் கோட்டத்திலும், நான்கு யாழ்ப்பாணக் கோட்டத்திலும் ஆறு வடமராட்சிக் கோட்டத்திலும், இரண்டு சாவகச்சேரி கோட்டத்திலும், எட்டு வேலணை கோட்டத்திலும் அமைந்துள்ளன. 04

## மண்ணெண்ணெய் விநியோகம்

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் அங்கத்தவர்களுக்குப் பங்கீட்டுக்கு மண்ணெண்ணெய், தீப்பெட்டி என்பனவற்றை நேற்று முதல் வழங்கி வருகின்றது.

ஒரு அட்டைக்கு அரை லீற்றர் மண்ணெண்ணெய் 5 ரூபாவுக்கும், மூன்று தீப்பெட்டிகலா ஒரு ரூபா 10 சதப்படியும் வழங்கப்படுகிறது.

## நகர போக்குவரத்துப் பிரிவு அலுவலக திறப்பு விழா



தமிழீழ காவல்துறையின் யாழ்நகர போக்குவரத்துப் பிரிவு அலுவலகம் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காண்கிறீர்கள்.

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா) அங்கு ஏற்றிவைப்பதையும், அருகில் காவல்துறையின் பொறுப்பாளர் திரு. நடேசன் தேசியக்கொடிக்கு மரியாதை செலுத்துவதையும் படத்தில் காணலாம்.

## தங்கத்திலான புதிய 500 ரூபா நாணயம் விரைவில் இங்கு புழக்கத்திற்கு வருகிறது!

பன்னிரெண்டு கரட் தங்கத்திலான புதிய ஐநூறு ரூபா நாணயமொன்றை மத்திய வங்கி விரைவில் வெளியிடவுள்ளது.

இம்மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள சார்க் ஐந்தாவது விளையாட்டு விழாவை முன்னிட்டே இந்த புதிய 500 ரூபா நாணயம் வெளியிடப்படவுள்ளது. அத்துடன் புதிய 100 ரூபா நாணயமொன்றும் அன்றைய தினம் வெளியிடப்படும்.

புதிய 500 ரூபா நாணயம் வட்ட வடிவமும், 14 மில்லி மீற்றர் விட்டமும் செப்பமான விளிம்பும் கொண்டதாக இருக்கும் 100 ரூபா நாணயம் தூய்மையான வெள்ளியில் சதுரவடிவமும் செப்பமான வளைவு விளிம்பும் 10 2 கிராம் நிறையும், 22 மில்லி மீற்றர் குறுக்குத் தட்டையும் உடையதாக அமைந்திருக்கும்.

## இடம் பெயர்ந்த 'இவர்' களால் விவசாயிகளுக்குத் தொல்லை

ஆனையிறவு, வெற்றிலைக்கேணிப் பகுதியில் நடந்த கடும் இராணுவ நடவடிக்கையால் மக்கள் மாத்திரமன்றி அப்பகுதிக் காடுகளில் இருந்த பன்றிகளும் இடம்பெயர்ந்து நாகர் கோவில், அம்பன், குடத்தனைப் பகுதிகளில் உள்ள சிறு காடுகளில் தஞ்சம் புகுந்துள்ளன.

இவை அப் பகுதியில் பயிர்களை அழித்து வருகின்றன. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூட்டமாகச் சென்று பன்றிகளைத் துரத்தி அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட பன்றிகள் இப்பகுதியில் தற்பொழுது காணப்படுகின்றன. இவை இரவு வேளைகளில் தோட்டப் பகுதியில் உள்ள கோரைக் கிழங்கை உழுது பிரட்டிச் சாப்பிடுகின்றன அத்துடன் பனங்கிழங்கையும் தேங்காய்களையும் நாசப்படுத்துகின்றன. (39)

## இன்று ஒளிவிழா

மிருசுவில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன்கத்தோலிக்க கனிஷ்ட வித்தியாலயம் ஆகியவற்றில் கிறிஸ்மஸ் ஒளிவிழாக்கள் இன்று வியாழக்கிழமை அவ்வப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளன. (13)

## மலையகத்தில் புதிதாக நடமாடும் வடபகுதியினரின் விவரம் சேகரிப்பு

மலையக தோட்டப்பகுதிக்கு புதிதாகவரும் வடபகுதி தமிழ் இளைஞர்கள் பற்றி தகவலைத்தருமாறு ஊவாமாகாண பிரதிபொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அப்பகுதியிலுள்ள தோட்டங்களின் நிருவாகங்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

தோட்டப்பகுதியில் புதிதாக நடமாடும் வடபகுதி தமிழர் பற்றிய தகவல்கள் உடனுக்குடன் வழங்கப்படல் வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

## 'மக்கள் இல்லாத இடத்தில் யாருக்கு சேவை செய்வது'? தீவக வைத்திய ஊழியர் பணிப்பாளருக்கு மகஜர்

'நாங்கள் தீவகத்திலிருந்து இங்கு இடம்பெயர்ந்த காலதிலிருந்த பதற்றமும், பயமும் இன்னமும் அங்கு நீங்கவில்லை. நாங்கள் சேவை அங்கு சென்று கடமையாற்றுவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது,

இவ்வாறு தீவகத்திலிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வந்த யாழ் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு நேரில் சமர்ப்பித்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளனர்.

புங்குடுதீவு அரசினர் வைத்

## 'கருணாநிதி கைது' வதந்தியினால்

நாங்கள் தீவகத்திலிருந்து இங்கு இடம்பெயர்ந்த காலது திலிருந்த பதற்றமும், பயமும் இன்னமும் அங்கு நீங்கவில்லை நாங்கள் சேவையாற்றுவதற்குரிய தீவக மக்களில் பெரும்பாலானோர் இன்னமும் இடம்பெயர்ந்த நிலையில் இங்கு வசிக்கின்றார்கள். இந்த சூழ்நிலையில் நாங்கள் [illegible] வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது,

இவ்வாறு தீவகத்திலிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாகஇடம்பெயர்ந்து வந்து இங்கு தற்காலிகமாக கடமையாற்றிவரும் சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களும், டாக்டர்களும் [illegible] சேவைப் பணிப்பாளருக்கு நேரில் சமர்ப்பித்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளனர்.

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை வேலணை அரசினர் வைத்தியசாலை ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை ஆகியனவற்றில் கடமையாற்றிய இடம்பெயர்ந்த டாக்டர்கள், ஊழியர்கள் ஒன்றிணைந்து இந்த மகஜரை சமர்ப்பித்துள்ளனர் தீவகத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மலேரியா தடுப்பு இயக்க வெளிக்கள ஊழியர்களும் இது போன்றதொரு மகஜரை பணிப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இடம்பெயர்ந்ததீவகத்தைச் சேர்ந்த சுகாதாரத் திணைக்கள ஊழியர்கள் அனைவரையும் அவர்கள் தற்காலிகமாகக் கடமையாற்றும் இடங்களில் இருந்து உடனடியாக அவர்களை விடுவிக்குமாறும், அது பற்றித் தமது அலுவலகத்திற்கு அறிவிக்குமாறும் யாழ் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பணித்திருந்தமை தெரிந்ததே.

(13, 15)

## தினமும் 'அட்டமி' என்றிருக்கக் கூடாதோ

''வாருங்கோ, வாருங்கோ குடும்ப சகிதமாய் வந்திருக்கிறியள் தீபாவளியும் அதுவுமாய் அட்டமியிலை...'' என்றார் வீட்டுக்காரர்.

விருந்தாளி மனைவியைப் பார்த்தார். பின்பு ''அட்டமி நேற்று இண்டைக்கு நல்ல நாள்'' என்றார்.

''இஞ்சை யார் இது தினமும் புழங்கிற இடம் நீ கேட்டாலும் குடிக்க ஒண்டும் தரமாட்டன்'' அவர் பிடிவாதமாகச் சொன்னார்.

விருந்தாளியின் மனைவி கணவனைப் பார்த்தாள். ''கூடாத நாளெண்டால் ஒண்டும் வேண்டாம்''

சிறிது நேரம் கதைத்து விட்டுப் போய் விட்டார்கள்.

வீட்டுக்காரரின் மனைவிக்கும் கணவனின் செயல் புதிராக இருந்தது'' உங்களுக்குத் தான் அட்டமி நவமியிலை நம்பிக்கையில்லையே என்றாள்,

''அட்டமியாவது, மண்ணாங்கட்டியாவது! சீனி ஒரு இடமும் இல்லை. போத்தில்லை நூறு கிராம் தான் இருக்கு. அவையிலை ஆறு பேர் பிள்ளைகளோட சீனி காணுமா? அட்டமியே நீ வாழ்க! களைச்சுப் போனன். ஒரு ரீ கொண்டு வாரும்'' என்றார்.

# 'கருணாநிதி கைது' வதந்தியினால் தமிழகத்தில் வன்செயல்கள்!

தி.மு.க. தலைவர் கருணாநிதி கைது செய்யப்பட்டு விட்டார் என காட்டுத்தீ போல பரவிய வதந்தியை அடுத்து தமிழகத்தில் பல பகுதிகளிலும் பல பஸ்கள் சேதமாக்கப்பட்டு, வன் செயல்கள் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

சென்னை தியாகராஜர்நகர் நுங்கம்பாக்கம்கோடம்பாக்கம் அம்பத்தூர்,தேனாம்பேட்டை உள்ளிட்ட தமிழகத்தின் பல பகுதிகளிலும் இந்த வன் செயல்கள் இடம்பெற்றுள்ளன.

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக முன்னாள் உள்துறை செயலர் ஆர். நாகராஜனின் பேட்டியொன்று கடந்த சனிக்கிழமை தூரதர்ஷனில் ஒளிபரப்பப்பட்டது. அதனையடுத்தே கருணாநிதி கைது செய்யப்படுள்ளார் என்றதாகத் தெரிவிக்கப்படுகின் வதந்தியும் அங்கு பரவியறது

## நமக்கு உதவக்கூடிய இரு கண்டுபிடிப்புக்கள்

தற்போதைய சூழ்நிலையில் வட பகுதி மக்களுக்கு உதவக் கூடிய இரு கண்டு பிடிப்புக்கள் இவை இவற்றை தகுந்த வழியில் பயன்படுத்த வேண்டியது உங்கள் பொறுப்பு- அந்தக் கண்டுபிடிப்புக்கள் இவை தான்.

### மிதிக்காமலேயே சைக்கிளைச் செலுத்தலாம்

ஜேர்மனியைச் சேர்ந்த இருவர் சைக்கிளின் பின்னால் சூரியசக்திப் பலகைகளைப் பொருத்தி சைக்கிளை மிதிக்காமலே சூரியசக்தியின் மூலம் மணிக்கு 28 கி மீ. வேகத்தில் செல்லக்கூடியதாகத் தயாரித்துள்ளனர். மழைகாலம் என்றால் மட்டுமே சங்கடம் - சைக்கிளை அப்போது மிதித்தே செலுத்த வேண்டியிருக்கும்.

### 'எக்ஸ்றே' எடுக்க சாதாரண தாளே போதும்

இந்திய ஜோத்பூர் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் சாதாரண காகிதத்திலேயே எக்ஸ்றே எடுக்க முடியும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். எக்ஸ்றே கதிர்ப்படத்தைப் பதிப்பதற்கு தனியான காகிதம் தேவையில்லை எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

## பசி போக்க சப்பாத்தை விற்ற ரஷ்யப் பெண்மணி

சோவியத் யூனியனில் பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. அத்தியாவசிய உணவுப் பண்டங்களை வாங்குவதற்கு மக்கள் பணத்திற்குப் பதிலாக பொருள்களைக் கொடுத்தும் பொருள்களை வாங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மாஸ்கோ நகரிலுள்ள ஒரு சந்தையில் ஒரு பெண்மணி தனது ஒரு சோடி பாதணிகளைக் கொடுத்து அதற்குப் பதிலாக மரக்கறி உணவை வாங்கியதாக பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. தற்போதுள்ள உணவு நெருக்கடியை நீக்குவதற்கு மேற்குலக நாடுகளிடமிருந்தும் 11 ஆயிரம் கோடிக்கு உணவு இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. கொர்பசேவ்வின் பதவிக் காலத்தில் நிலவும் மிக மோசமான உணவு நெருக்கடி இதுவென ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

### யாழ் பெரியாஸ்பத்திரியில்

# நோயாளர் தொகை தினமும் அதிகரிப்பு

# இன்றுமுதல் இலக்க துண்டு வழங்கப்படும்

யாழ் போதனா வைத்திய சாலை வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவில் இன்று 5-ம் திகதி முதல் நோயாளர்களுக்கு வழங்கப்படும் துண்டுகளைப் பெறுவதற்கு முன்னராக இலக்கத்துண்டுகள் வழங்கப்படும் முறை அமுலுக்கு வருகிறது.

முன்னர் இலக்கத் துண்டுகளை வழங்காமலே சிகிச்சை சம்பந்தமான துண்டுகள் வழங்கப்பட்டுவந்தன.

நோயாளர் பெரும்தொகையாக வருவது அதிகரித்துள்ளதாலும் வெளிநோயாளர் பகுதியில் வைத்தியர்கள் பற்றாக்குறை நிலவுவதாலுமே மட்டுப்படுத்துமுகமாகவே நம்பர் துண்டுகள் விநியோகம் நடைமுறைக்கு வருவதாக வெளிநோயாளர் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

நம்பர் துண்டு வழங்கும் முறை கிளினிக்குகளில் மட்டுமே நடைமுறை படுத்தப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் யாழ் பெரியாஸ்பத்திரியில் நேற்று மட்டும் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சுகவீனமுற்ற குழந்தைகள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்காக வந்ததையும் காணமுடிந்தது.

செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் மட்டும் சுமார் 15 குழந்தைகள் கொண்டுவரப்பட்டனர்.

இடைநாட்டில் குழந்தைகளுக்கு வயிற்றோட்டம், வயிற்றுளைவு, காய்ச்சல் என்பன தீவிரமாக பரவிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. 07

### நெடுந்தீவு, நயினாதீவு

## அரசாங்க ஊழியருக்கு 3மாத சம்பளம் வழங்கவில்லை

நயினாதீவில் உள்ள அரச ஊழியர்கள் படையினரின் கூடாரப்படுத்தலாக பணி புரிவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்குரிய மூன்று மாதச்சம்பளம் இன்னமும் முழுமையாக வழங்கப்படவில்லை எனவும், இம்மாதம் 1ஆம் திகதியில் இருந்து பகுதி பகுதியாக படையினர் வழங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல நெடுந்தீவுப் பகுதியில் உள்ள அரச ஊழியரும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரு தீவுகளில் பணி புரியும் அரச ஊழியர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்தே சம்பளம் அனுப்பப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

தீவுப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு இனிமேல் தீவுப்பகுதிக்குச் சென்றாலே சம்பளம் வழங்கப்படும் என அரசு அறிவித்ததும் குறிப்பிடத்தக்கது. (07)

### மத்திய மாகாண அமைச்சர் கேட்கிறார்

## கண்டிய நடனமா தோப்புக்கரணமா

கண்டிய நடனம் ஆடுபவர்கள் இப்போது கரணம் அடிக்கிறார்கள் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் அந்த நடனத்தையே இழிவு படுத்துகிறார்கள்.

இவ்வாறு மத்திய மாகாண அமைச்சர் பி.சி இம்புலான கண்டியில் நடந்த நிகழ்ச்சியொன்றில் உரையாற்றும் போது கூறினார்.

அவர் தொடர்ந்து பேசிய போது ''சுட்டுநாயக்க விமானநிலையத்தில் உல்லாசப்பயணிகள் முன்பு கண்டிய நடனம் ஆடுவதாக கூறி தோப்புக்கரணம் அடிக்கிறார்கள். இது நமது பண்பாட்டுக்கும், பாரம் பரியமான கண்டிய நடனத்துக்கும் பெரும் இழுக்காகும்'' எனக்கூறினார்.

### சபையில் அத்தாவுட கோரிக்கை

## தெரிவுக்குழு முன்பாக அரசு திட்டத்தை வைக்க வேண்டும்

தெரிவுக்குழு ஒன்றை நியமித்து விட்டால் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியாதுஎன அத்தாவுடசெனிவிரத்தினபாராளுமன்றத்தில் கூறினார்.

தெரிவுக்குழு முன்னர் அரசின் இனப்பிரச்சினைக்கான தீர்வு, திட்டம் என்பன சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் அவர் சொன்னார்.

தொடர்ந்து பேசிய அவர்; இன மத பேதம் பாராட்டிக் கொண்டு பிரச்சினையைத் தீர்க்க முடியாது

ஐ.தே. கவும், சு. கவும் ஒன்று பட்டாலே இனப்பிரச்சினையை சுலபமாக தீர்க்க முடியும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஐ தே கவும் சு. கவும் தவறிவிட்டன என்றார். 06

### நயினாதீவில்..

தெரிவிக்கப்படுகிறது

நயினாதீவில் வர்த்தக நிலையங்கள் வைத்திருந்தவர்களும் இராணுவம் வரும் நிலை அறிந்து முன்னதாகவே இடம்பெயர்ந்து விட்டதால் அங்குள்ள தனியார் கடைகள் வெறிச்சோடிக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

### முறையிட்டும் பலன் பூஜ்யமே

இதேவேளை இந்த உணவுப்பஞ்ச நிலையில் மக்கள் அரச அலுவலர்கள், ஊர்ப் பிரமுகர்கள் ஊடாக அங்குள்ள ஸ்ரீலங்கா கடற்படையினரிடம் எடுத்துச்சொன்ன போது அவர்கள் கோரிக்கையைத் தட்டிக்கழித்து பெயரளவுக்கு சொற்ப அளவு உணவுப் பொருள்களை வழங்க முற்பட்டனராம்.

ஒரும்பத்துக்கு ஒருகிலோ அரிசி 40 ரூபா வீதமும், தேங்காய்எண்ணெய் ஒரு போத்தல் 45 ரூபாவாகவும் வழங்கப்பட்டதாம்.

இவை கூட குடும்பங்களுக்கு மூன்று வாரங்களுக்கு போதுமானதாகவே இருந்தது

### பாலுணவும் இல்லா நிலை

## பிரசார நடவடிக்கையாக லலித்தின் பிறந்த நாள்

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி தமது பிறந்த நாளை பிரசார நடவடிக்கையாக மேற்கொண்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் 26 ஆம் திகதி இவரது பிறந்த நாள் என்றுமில்லாதவாறு நடைபெற்றதாகவும், இரத்ததானம், ஏழைகளுக்கு அன்னதானம், மத வழிபாடுகள் என்பன இடம்பெற்றதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன. (06)

### யாழ் ஆஸ்பத்திரிக்கு

## ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச்செல்லும் நிலை

யாழ் பெரியாஸ்பத்திரிக்கு 1990-1991 ...

இராணுவ நடவடிக்கையின் ...

### நவம்பர் மாதம்

## உணவு முத்திரைக்குரிய பொருள் விநியோகம்

உணவு முத்திரைக்கு இம் மாதத்திற்கு 6 ஆம் தொடரின் 8 ஆம் புள்ளி உரித்துடையதாகும் என சமூக சேவைப்பகுதி பலநோ.கூ. சங்கங்களுக்கு அறிவித்துள்ளது.

5 ஆம் தொடரின் 12 ஆம் புள்ளி நவம்பர் மாதத்திற்கு ஏற்புடையதாகும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

உணவு முத்திரையின் முழுப் பெறுமதிக்கும் மாவை கட்டுப்பாட்டு விலைக்கு விற்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

### இலங்கை வங்கி யாழ் கிளை

## 'சாவ்' விளையாட்டுப் போட்டி 5 யாழ் சிறுவர்களுக்கு அதிர்ஷ்டம்

கொழும்பில் நடைபெறும் தெற்காசிய நாடுகளின் சம்மேளன விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதற்கு இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளையில் சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருப்போருக்கும் அதிர்ஷ்டலாபச் சீட்டு மூலம் அனுமதிச் சீட்டுக்கள் கிடைத்துள்ளன.

யாழ் மேத்தரக் கிளையில் டிசம்பர் 2ஆம் திகதி இடம் பெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் மூலம் ஐவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அதிர்ஷ்டசாலிகளான சிறுவர் சேமிப்புக்கணக்கு இலக்கங்கள் வருமாறு: 1785, 1253, 1904, 2250 ,2369.

15.11.91 வரை சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவர்களில் ஐவரே இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டனர்.

### வளைகுடாப் போர் விளைவு:

## பாரெய்னுக்கு $2\frac{1}{2}$ கோடி டொலர் உதவி தேவை

வளைகுடா யுத்தத்தினால் ஏற்பட்ட சுற்றாடல் சூழல்களின் பாதிப்பை அகற்றுவதற்கு $2\frac{1}{2}$ கோடி டொலர் உதவுமாறு பாரெய்ன் சர்வதேச நாடுகளைக் கேட்டிருக்கிறது.

ஐ.நா. சபையின் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவு இக்கோரிக்கையை ஆராய்வதற்காக அடுத்த வருடம் கூடவிருக்கிறது. இக்கூட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய புனரமைப்பு நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்படுமெனவும் ஐ.நா. அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### தகவல்...

இந்தப் பார்சலை எடுக்க ...

## அதிருப்திக் குழுவைச் சேர்ந்த லக்ஷ்மன் பொலிஸாரால் கைது

ஐ.தே.க. விலிருந்து வெளி ...

## திரும்பிச்செல்லும் நிலை

யாழ் பெரியாஸ்பத்திரிக்கு 1990-1991 ஆண்டு ஒதுக்கப்பட்ட பெருமளவு நிதி பயன்படுத்தப்படாமல் திரும்பிச் செல்லும் நிலையில் இருப்பதாகத் தெரிய வருகிறது.

இராணுவ நடவடிக்கையின் போது சேதமாக்கப்பட்ட ஆஸ்பத்திரி கட்டிடங்களைத் திருத்தவும் இந்நிதி பயன்படுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (02)

# உறவினர்களின் தொடர்பின்றி மனநோயாளர்கள் அவதி

மானிப்பாய் தனியார் வைத்தியசாலையில் இயங்கி வரும் தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்திசாலையில் மனநோயாளர் வார்ட்டில் அனுமதிக்கப்படும் நோயாளர்களில் பலரை அவர்களது வீட்டார்களோ, உறவினர்களோ அடிக்கடி வந்து பார்ப்பதில்லை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன.

சிலர் மேற்படி மனநோயாளர்களை வார்ட்டில் அனுமதிப்பதுடன் தங்கள் கடமை முடிந்துவிட்டது என்று கருதி பின்பு வராது இருந்து விடுகின்றார்கள் என்றும் நோயாளிகளில் பலர் சுய நினைவுடன் இல்லாதிருப்பதால் அவர்கள் பற்றிய விவரங்களை நோயாளர்களின் வீட்டுக்காரர்களுக்கோ அல்லது நெருங்கிய உறவினருக்கோ தெரிவிக்க முடியாது இருப்பதாகவும் மேற்படி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. 13

---

21 இல் ...

போது இவ்விணக்கம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதமுற்பகுதியில் மூன்று தினங்களுக்கு நடைபெறவிருந்த இம்மாநாடு பூட்டான் பங்கு பற்றாததினால் ஒத்திவைக்கப்பட்டமை தெரிந்ததே.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 05.12.1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

பாலுணவும் இல்லா நிலை

மேலும் இங்கு வாழும் குழந்தைகளுக்கு எவ்விதப் பாலுணவு மற்றும் மருந்து வகைகள் எதுவும் இல்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அங்குள்ள அரசினர் ஆஸ்பத்திரி இயங்குவதாகக் கூறப்படுகின்றபோதிலும் பயனேதும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

போஷாக்குள்ள உணவுகள் கிடைக்காததால் அங்குள்ளவர்கள் பலவகையிலும் துன்பம் அடைவதாகவும் தொழில் வருமானம் இன்றி உள்ளவர்கள் குறிப்பிட்ட சிறிதளவு உணவுப்பொருட்களைக் கூட பணம் கொடுத்து வாங்க முடியாது தவிப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசின் வெறும் பிரசாரம்

இதேவேளை தீவுப்பகுதியில் நிலைமையைச் சீராக்க ஸ்ரீலங்கா அமைச்சர்கள் சிலர் அண்மையில் விஜயம் செய்ததாகவும், இங்கிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மீண்டும் வந்து சீராகவாழலாம் என ஸ்ரீலங்கா அரசு பிரசாரம் செய்துவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (07)

தகவல்...

இந்தப் பார்சலை எடுக்க சங்கப்பகுதிக்கு நால்வர் வந்தபோது விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (06)

---

மன்னார்...

இவர்கள் கரடியனாறு] வீரமரணமடைந்தார்.

பொற்கேணிக் கரையோரகிராமத்தில்

இது இவ்வாறிருக்கப்பொற்கேணிக்கரையோரக் கிராமத்திலும் நேற்றுக்காலை விமானத்தாக்குதல் இடம்பெற்றது.

இங்கு நிகழ்ந்த மோதலின் போது கடேட் பாடகன் (பூ. ஜெகதீஸ்வரன், செங்கலடி) வீரமரணமடைந்தார்.

---

தேவைகளுக்கு...

6 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தாம் மேற்கொண்ட விதவைகள் உதவித்திட்டம் பயன்பாடுகள் குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள அந்நிறுவனத்தினர் தம்மிடமிருந்து உதவிபெறும் விதவைக் குடும்பங்கள் தமக்குப் பொருத்தமான செயற் திட்டங்கள் யாது என்பதைத் தீர்மானிக்க முடியாதிருக்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

# லக்ஷ்மன் பொலிஸாரால் கைது

ஐ.தே.க. விலிருந்து வெளியேற்றப்பட்ட அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த லக்ஷ்மன் செனிவரட்ன பொலிஸாரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரால் இவர்கைது செய்யப்பட்டதற்கான காரணம் தெரியவில்லையாயினும் மிரட்டல் நடவடிக்கையாகவே பொலிஸார் இவரைக் கைது செய்தனர் என ஆதரவாளர்கள் தெரிவித்தனராம்.

# நச்சு வாயுக் கசிவினால் 1000 குடும்பங்கள் வெளியேறின

கொடிய நச்சுத்தன்மை வாய்ந்த ரசாயனம் ஏற்றிச் சென்ற புகையிரதக் கொள்கலன் அணித்தொடர் ஒன்று பாதையை விட்டு விலகி ஆற்றினுள் விழுந்ததால் ஏற்பட்ட ரசாயனக் கசிவு காரணமாக அந்தச்சுற்றாடல் பெரிதும்பாதிப்புக்குள்ளாகின.

இதன் காரணமாக அப்பகுதியைச் சேர்ந்த ஆயிரம் குடும்பங்கள் பாதுகாப்பின் நிமித்தம் உடனடியாக அப்புறம் படுத்தப்பட்டன.

அமெரிக்காவைச் சேர்ந்த ஹென்ருக்கு எனும் மாகாணத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது கசிவினால் ஏற்பட்ட பெரும் தீச்சுவாலை அவ்வேளையில் பெய்த மழை காரணமாக கொளுந்து விட்டெரியவில்லை. இதனால் பெருத்த உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

---

## சாதனை

குவைத் நாட்டை ஆக்கிரமித்த ஈராக்கியரை வெளியேற்றியதும் பிரிட்டனில் நிலவிய பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தியதும் தமது முதல் வருடச் சாதனை என்று பிரிட்டிஷ் பிரதமர் மக்கள் சபையில் கூறியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் உள்நாட்டுக் கொள்கையிலும் வெளிநாட்டுக் கொள்கையிலும் பெரும் மாற்றங்கள் செய்து சகலரினதும் பாராட்டைப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டார்.